**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>**
**<u>மேட்டூர் நகராட்சி</u>**

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர்அவர்களால் 29.04.2020 ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

<u>மன்றப் பொருள்</u>

**1.** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் மூலம் கொசுக்களை கட்டுப்படுத்துவதற்கு நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் உள்ள தெருக்கள் மற்றும் வீடுகளில் விடுதலின்றி கொசுப்புகை மருந்து கொண்டு புகை அடிக்க, புகையடிக்கும் இயந்திரத்திற்கு பெட்ரோல்/டீசல் மற்றும் ஆயில் தேவைப்படுவதால் 2020–2021 ஆம் ஆண்டிற்கு நேரடியாக M/S..மகாலட்சுமி டிரேடர்ஸ்( Indian Oil Dealers), மேட்டூர் அவர்களிடம் வாங்கிக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ.10,00,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவு தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1431/2020/எச்1)**

**தீர்மான எண். 68 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**2.** இந்நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் உள்ள தெருக்கள் மற்றும் சாலையோரம் வளர்ந்துள்ள புல் மற்றும் செடிகளை வெட்டுவதற்கு பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தி வரும் இரண்டு புல் வெட்டும் இயந்திரத்திற்கு பெட்ரோல்/டீசல் மற்றும் ஆயில் தேவைப்படுவதால் 2020–21 ம் ஆண்டிற்கு நேரடியாக M/S..மகாலட்சுமி டிரேடர்ஸ் (Indian Oil Dealers), மேட்டூர் அவர்களிடம் வாங்கிக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ.2,00,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவு தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1432/2020/எச்1)**

**தீர்மான எண். 69 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**3.** கொரோனா வைரஸ் COVID – 19 நோய் தொற்று தற்பொழுது உலகளவில் பரவி அதன் தாக்கம் இந்தியாவில் அதிவேகமாக பரவி வருகின்றது. தமிழ்நாட்டில் இவ்தொற்றானது அனைத்து மாவட்டங்களிலும் பரவியுள்ள இந் நோய் தொற்றினை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் தடுப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளப்பட்டு வருகின்றது. இருப்பினும் இந்நோய் தொற்றானது நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே செல்வதால் அவற்றை தடுக்கவும், கட்டுப்படுத்தவும், துணை இயக்குனர் சுகாதாரப்பணிகள், சேலம் அவர்களின் கடித ந.க.எண்3076/இ5/2012, நாள் 02.04.2020–ந் தேதிய கடிதத்தில் 40 தற்காலிக தினகூலி களப்பணி பணியாளர்களை உடனுக்கு உடன் பணிக்கு அமர்த்தி கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு பணி மற்றும் கிருமி நாசினி தெளிப்பு பணிகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினமே துணை இயக்குனர் சுகாதாரப்பணிகள் சேலம் அவர்கள் தொலைபேசியில்

தற்போது அனுமதிக்கப்பட்ட 40 தற்காலிக களப்பணி பணிளாயர்கள் பற்றாக்குறையாக உள்ளதாலும். கூடுதலாக 10 தற்காலிக தினகூலி களப்பணியாளர்களை நியமனம் செய்யுமாறும் அறிவுறுத்தியதின் பேரில் மொத்தம் 50 தற்காலிக களப்பணி பணியாளர்களை பணிக்கு அமர்த்த மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் அவர்களின் மாவட்ட சந்தை நிலவரப்படி (2019–2020 நிதியாண்டிற்கு) நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தற்காலிக தினக்கூலி பணியாளர்களுக்கான நாள் 1–க்கு நபர் 1க்கு ரூ.370/– வழங்க நிர்ணயம் செய்யபட்டுள்ளது. எனவே இந்த 50 தற்காலிக தினக்கூலி களப்பணியாளர்களை சுயஉதவிக்குழுக்கள் மூலமாக ஏப்ரல் 2020 முதல் மற்றும் மே 2020 ஆகிய இரு மாதங்களில் 61 நாட்களுக்கு பணிக்கு அமர்த்தி கொள்ளவும், அதற்காக ஆகும் செலவினம் தொகை (61x50x3050=1128500/–) ரூ.11,28,500/– ஆகும் என்பதனையும், இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்தோ அல்லது கொரோனா தொற்று நோய் தடுப்பு குறித்து அரசிடமிருந்து நிதி வரப்பெறும் அந்நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் தொற்று நோயினை தடுக்கவும், கட்டுப்படுத்தும் பணிக்கு, கிருமி நாசினி ஒழிப்பு பணிக்கு 50 தற்காலிக, தினக்கூலி களப்பணியாளர்களை உடனடியாக நியமனம் செய்யப்பட்டு உரிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள துணை இயக்குனர் சுகாதாரப் பணிகள் சேலம் அவர்களின் மூலம் வரப்பெற்ற கடிதத்தின்படி இந்த 50 தற்காலிக தினக்கூலி களப்பணியாளர்களை சுயஉதவிக்குழு மூலமாக ஏப்ரல் 2020 முதல் மற்றும் மே 2020 முடிய 61 நாட்களுக்கு பணிக்கு அமர்த்தி கொள்ளவும், இவர்களுக்கான ஊதியம் 2019–2020 நிதியாண்டிற்கு மாவட்ட ஆட்சியர் சேலம் அவர்களின் மாவட்ட சந்தை நிலவரப்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகையான நபர் 1–க்கு நாள் 1–க்கு ஊதியம் ரூ 370/– வீதம் (61x50x3050=1128500/–) ரூ.11,28,500/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்தோ, கொரோனா வைரல் தடுப்பு பணிக்காக அரசிடமிருந்து வரப்பெறப்படும் நிதியிலோ செலவினம் மேற்க்கொள்ளவும், இப்பணியானது அறிவிக்கப்பட்ட தொற்று நோய் என்பதால் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் 50 தற்காலிக தினக்கூலி களப்பணியாளர்களை 03.04.2020–ந் தேதி முதல் பணிக்கு ஈடுபடுத்தி பணிகளை மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1232/2020/எச்1)**

**தீர்மான எண். 70 நாள். 29.04.2020**

**<u>அனுமதிக்கப்பட்டது</u>**

**4.** பொது சுகாதாராம் தற்போது உலகளவில் பரவி வரும் அறிவிக்கை செய்யப்பட்ட தொற்று நோயான கொரோனா வைரஸின் தாக்கம் இந்தியாவில் ஏற்பட்டு, குறிப்பாக தமிழகத்திலும் இந்நோயின் தாக்கம் அனைத்து மாவட்டங்களிலும் பரவி வருகிறது. அவ்வாறு நோய் தொற்று பரவி வரும் வேளையில் இந்நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் நோய் தொற்று கண்டவர்களின் பகுதிகள் வெளிமாநிலங்கள் , வெளி/நாடுகளிலிருந்து வந்தவர்கள், என கண்டறிந்து அவர்கள் அவர்களை வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டு தினசரி 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. எனவே பொது இடங்கள், நோய் தொற்று கண்டறியப்பட்டுள்ள பகுதிகள், தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளுக்கு கிருமிநாசினி தெளிக்க தேவையான நீர்த்த சுண்ணாம்பு தூள் அவசியம் தேவைப்படுகின்றது. எனவே பொது சுகாதாரப் பணிகளுக்காக பொதுசுகாதாரம் அவசரம் அவசியம் கருதி நீர்த்த சுண்ணாம்பு தூளை 20 டன் கொள்முதல் செய்யவும், அதற்காக தயாரிக்கப்பட்ட தோராய மதீப்பீடு தொகை ரூ.2,40,000 /- ஆகும். எனவே கிருமிநாசினியான நீர்த்த சுண்ணாம்புத் தூளை அரசு சார்ந்த கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியினிலோ அல்லது கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளுக்காக வரப்பெறப்படும் அரசு நிதியினிலோ செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கொரோனா வைரஸ் நோய் தொற்று ஏற்பட்டுள்ள பகுதிகள், தனிமை படுத்தப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் பொது இடங்களில் கிருமிநாசினி தெளிக்க தேவையான நீர்த்த சுண்ணாம்பு துாளை 10,000 கிலோ அரசு சார்ந்த கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டு தொகையான ரூ.1,30,000/-க்குள் கொள்முதல் செய்யவும், அதற்கான விலைப்புள்ளிகள் கோரி கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்தோ , அல்லது கொரோனா நோய் தொற்று தடுப்பு குறித்து அரசிடமிருந்து வரப்பெறப்படும் நிதியினிலோ செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.2205/2019/எச்1)**

**தீர்மான எண். 71 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

5. கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் விதமாக பொதுமக்கள் ஒரே இடத்தில் கூடுவதை தவிர்க்கும் பொருட்டு மாண்புமிகு இந்திய பிரதமர் மற்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் நாடு முழுவதும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அமுலில் இருந்து வருகிறது. மேற்படி தடை உத்தரவு அமுலில் உள்ளதால் பொதுமக்கள் தங்களின் அத்தியாவசிய தேவையான காய்கறிகளை தினசரி மார்க்கெட்டிற்கு சென்று பெற இயலாத நிலை உள்ளது. எனவே தமிழக அரசு இதனை கருத்திற் கொண்டு, பொதுமக்கள் ஒரே இடத்தில் கூடுவதை தவிர்க்கும் பொருட்டு அத்தியாவசிய தேவையான காய்கறிகளை நடமாடும் வாகனங்கள் மூலம் ஒரு பையில் உள்ள காய்கறிகளின் மதிப்பு ரூ.100/– வீதம் பொதுமக்களுக்கு அவர்களது வீடுகளுக்கே சென்று விற்பனை செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் ஆகியோரின் புலனச்செய்தி (Whatsapp) யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளுக்கும் அரசின் தடை உத்தரவு அமுலில் இருக்கும் வரை காய்கறிகளை விநியோகம் செய்து விற்பனை செய்ய ஏதுவாக நடமாடும் இலகுரக நான்கு சக்கர சரக்கு வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி கொள்ளும் பொருட்டு இந்நகரப் பகுதியில் உள்ள வண்டிகளை வண்டி ஒன்றுக்கு, நாளொன்றுக்கு வாடகையாக ரூ.1000/–க்கும், பொதுமக்கள் அறியும் விதமாக வாகனங்களில் மைக் செட் அமைக்க நாளொன்றுக்கு வாடகையாக ரூ.500/–க்கும், மேலும் காய்கறிகளை பொதுமக்களுக்கு வழங்கிடும் பொருட்டு தேவையான பைகளை கொள்முதல் செய்து கொள்ளவும், வாகனங்களில் பொதுமக்கள் அறியும் வகையில் பேனர்கள் கட்டிட ஏதுவாக பேனர்களுக்கான செலவுகளுக்கும், மேலும் காய்கறிகளின் அன்றைய விலைக்கு ஏற்ப கொள்முதல் செய்து பெற்றுக் கொள்ளவும், இவை அனைத்திற்கும் ஆகும் உத்தேச செலவினத்திற்கும், மேலும் ஒரு நாளில் கொள்முதல் செய்து விற்பனை செய்யும் காய்கறிகள் மூலம் பெறப்படும் தொகையை காய்கறி வழங்கும் விற்பனையாளருக்கு அன்றைய தினமே பட்டுவாடா செய்யவும், மேற்படி பணிகளை இந்நகராட்சி பணியாளர்களைக் கொண்டு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணிகளுக்கான செலவினங்களை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1439/2020/அ2)**

**தீர்மான எண். 72 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**6.** பொது சுகாதாரம் கோவிட்- 19 கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்கவும், தொற்று கண்டுள்ளப் பகுதிகள், தனிமை படுத்தப்பட்டுள்ள பகுதிகள், மற்றும் பொது இடங்களில் கிருமி நாசினி தெளிக்க தேவையான நீர்த்த சுண்ணாம்பு துாளை கொள்முதல் செய்ய 04.04.2020 -ந் தேதி விலைபுள்ளி அறிவுப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவுப்பு செய்யப்பட்டதில் 08.04.2020 –ந்தேதி கீழ்கண்ட அரசு சார்ந்த கூட்டுறவு சங்கங்கள் மூலம் விலைப்புள்ளிகள் வரபெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம்:

| வ.எண். | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை கிலோ 1-க்கு ரூ. பை | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1. | எஸ்:527, கெலமங்கலம், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் லிட், கெலமங்கலம், கிருஷ்ணகிரி | 11/- | அதிகம் |
| 2. | டி.டி.165, பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், வண்ணாத்திப்பட்டி, மாங்கரை, தருமபுரி | 9.50/- | குறைவு |
| 3 | ஊரக விரிவாக்க பயிற்சி நிலைய கூட்டுறவு பண்டகசாலை கே.கே.251, கிருஷ்ணகிரி அணை, கிருஷ்ணகிரி | 10,00/- | அதிகம் |

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதாரம் கோவிட்- 19 கொரோனா வைரஸ் நோய் தொற்று ஏற்பட்டுள்ள பகுதிகள், தனிமை படுத்தப்பட்டுள்ள பகுதிகள், மற்றும் பொது இடங்களில் கிருமி நாசினி செய்ய தேவையான நீர்த்த சுண்ணாம்பு துாளை கொள்முதல் செய்ய விலைபுள்ளிகள் கோரப்பட்டதில், வரப்பெற்ற வேறு விலைப்புள்ளிகளில் வரிசை எண்-2ல் காணும் M/s.டி.டி.165, பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், வண்ணாத்திப்பட்டி, மாங்கரை, தருமபுரி என்ற அரசு சார்ந்த கூட்டுறவு சங்கம் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கப்பட்டுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதியின் பேரில் பணி உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2205/2019/எச்1)**

**தீர்மான எண். 73 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

7. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை – 28 அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண்.5437/2020–10/ஜே1 நாள்.09.04.2020ன்படி தற்பொழுது அறிவிக்கப்பட்ட தொற்று நோயான கொரோனா வைரஸ் தமிழகத்தில் மிக அதிகமாக பரவி நாளுக்கு நாள் தொற்று கண்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே செல்கிறது எனவும், இத்தொற்றை கட்டுப்படுத்தவும், தடுக்கவும் பணியில் ஈடுபடும் அனைத்து துாய்மை பணியாளர்களுக்கு தேவையான முழு உடல் பாதுகாப்பு உறைகள், முக கவசங்கள், கையுறைகள், கிருமி நாசினி மருந்துகள் போன்றவற்றை தேவையான அளவிற்கு முன்னேற்பாடாக கொள்முதல் செய்து வாங்கி வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள

அறிவுரைகளின்படி தற்பொழுது பாதுகாப்பு பொருட்கள், கிருமி நாசினி மருந்துகள், இருப்பு மிகவும் குறைந்த அளவில் உள்ளதால் போர்க்கால அடிப்படையில் கொள்முதல் செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கொரோனா நோய் தொற்று கண்டவர்களின் எண்ணிக்கை 5 ஆகவும், மேலும் சளி, இருமல், தும்மல் போன்ற அறிகுறிகள், வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களின் எண்ணிக்கை 52 ஆகும். இவர்களை தங்களுடைய வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டு தினமும் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. எனவே நோய் தொற்று ஏற்பட்டுள்ள இடங்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள வீடுகள் அனைத்தும் 5 கிலோ மீட்டர் தூரம் நகராட்சியின் எல்லையை உள்ளடக்கிய பகுதியாகும். எனவே இப்பகுதிகளில் பணிபுரியும் அனைத்து தூய்மை பணியாளர்களுக்கும், மற்றும் களப்பணியாளற்றும் பணியாளர்களுக்கும் தேவையான பாதுகாப்பு முகவுறைகள், கையுறைகள், உடல் பாதுகாப்பு உடைகள் PPE KIT மற்றும் கிருமி நாசியினியான லெமன் கிராஸ் ஆயில், சோடியம் ஹைபோகுளோரைடு,லைசால் போன்ற மருந்து பொருட்களை தினமும் பயன்படுத்தவும், தெளிக்கப்பட்டும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே கீழ்க்கண்ட பாதுகாப்பு பொருட்கள் மற்றும் கிருமி நாசினி பொருட்களை கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.13,79,000/— ஆகும் எனவும் இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலோ அல்லது கொரோனா நோய் தொற்று தடுப்பு குறித்து அரசிடமிருந்து வரப்பெறும் நிதிகளோ செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது. அவற்றின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| | | |
|---|---|---|
| 1 | முகவுறை 1க்கு ரூ.54 வீதம் 2000No's 2000X54 =1,08,000 | ரூ.1,08,000/— |
| 2 | லைசால் 5% லிட்டர் 1க்கு ரூ.212/— வீதம் 2000லி X 212 =4,24,000 | ரூ.4,24,000/— |
| 3 | கையுறை 1ன் விலை ரூ.195/— வீதம் 195 No's X1500 =2,92,500 | ரூ.2,92,500/— |
| 4 | லெமன் கிராஸ் ஆயில் லிட்டர் 1ன் விலை ரூ.2400/— வீதம் 2400 X 150லி =3,60,000 | ரூ.3,60,000/— |
| 5 | சோடியம் ஹைபோகுளோரைடு லிட்டர் 1க்கு ரூ.50/— வீதம் 2000X 50 = 1,00,000 | ரூ.1,00,000/— |
| 6 | முழு உடல் பாதுகாப்பு உடை (PPE KIT) 1ன் விலை ரூ.1050/— வீதம் 1050X 90 = 94,500 | ரூ.94,500/— |
| | ஆகமொத்தம் | ரூ.13,79,000/— |

<u>அலுவலக குறிப்பு:—</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. கொரோனா வைரஸ் நோய் தொற்று தீவிரமாக பரவி வருவதையொட்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை — 28 அவர்களின் சுற்றறிக்கையின்படி, நோய் தொற்றை கட்டுப்படுத்தவும், தடுக்கவும் தொற்று கண்டறியப்பட்டுள்ள வீடுகள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் தூய்மை பணியாளர்களை கொண்டு அனைத்து சுகாதாரப்பணிகளை மேற்கொள்ள தேவையான பாதுகாப்பு உடைகள் PPE KIT, முகவுறைகள், கையுறைகள், மற்றும் கிருமி நாசினி மருந்துகளான சோடியம் ஹைபோகுளோரைடு, லைசால் 5% லெமன் கிராஸ் போன்ற பொருட்கள் இருப்புகள் தற்பொழுது குறைவாக இருப்பதாலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் கடிதத்தின்படி மேற்கானும் தொற்று நோய் தடுப்புப்பணிகளுக்கு தேவையான பாதுகாப்பு பொருட்கள் மற்றும் கிருமி நாசினி மருந்துகள் கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.13,79,000/—க்கு செலவினம் மேற்கொள்ளவும், இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலோ, அல்லது கொரோனா தொற்று நோய் தடுப்பு பணிக்கு அரசிடமிருந்து நிதி வரப்பெறும் நிதியிலோ செலவினம் மேற்கொள்ளவும், இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி கொள்முதல் செய்ய போதிய கால அவகாசம் இல்லாத நிலையில் உள்ளதால் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் விலைப்புள்ளிகள் கோருவதற்கு மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1232/2020/எச்1)**

**தீர்மான எண். 74 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**8.** பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் நோயினை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் தேவையான பாதுகாப்பு பொருட்கள், கிருமி நாசினி மருந்துகள் கொள்முதல் செய்ய **09.04.2020**-ந் தேதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் **11.04.2020**-ந் தேதி கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப் பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | விலைப் புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | பொருட்களின் பெயர் | | | | | | சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | **லைசால் 5% லிட்டர் ஒன்றின் விலைப்புள்ளி தொகை ரூ.பை.** | **உடல் பாதுகாப்பு உடை PPE KIT 1-ன் விலைப்புள்ளி தொகை** | **கையுறை 1-ன் விலைப்புள்ளி தொகை ரூ.பை.** | **முகவுறை 1-ன் விலைப்புள்ளி தொகை ரூ.பை.** | **சோடியம் ஹைபோகுளோரைடு லிட்டர் 1-ன் விலைப்புள்ளி தொகை ரூ.பை** | **லெமன் கிராஸ் ஆயில் 1லிட்டரின் விலைப்புள்ளி தொகை ரூ.பை** | |
| 1 | M/s.ஸ்ரீஅக்ஷயா டிரேடர்ஸ் 4/10, கிழக்கு சாராய பட்டறை வீதி, உறையூர், திருச்சி. | 212/- | 1080/- | 210/- | 52/- | 49.50/- | 2380/- | அதிகம் |
| 2 | M/s ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், 1/34, காளியப்ப நாய்க்கன்பட்டி, சேந்தமங்கலம், நாமக்கல். | 205/- | 1020/- | 192/- | 49/- | 49/- | 2350/- | அதிகம் |
| 3 | M/s ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன் , 60/101, A1B,6 R.S.பில்டிங் குளக்கரை தெரு, காமராஜ் நகர், நாமக்கல். | 196/- | 980/- | 188.16/- | 46.48/- | 47.4/- | 2296/- | குறைவு |

**அலுவலக குறிப்பு:—**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்கவும், கட்டுப்படுத்தவும், துாய்மை பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உடைகள் , கவசங்கள் மற்றும் கிருமிநாசினி மருந்து பொருட்கள் கொள்முதல் செய்ய வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண் 3-ல் காணும் M/s ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன் , 60/101, A1B,6 R.S.பில்டிங் குளக்கரை தெரு, காமராஜ் நகர், நாமக்கல் என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கியுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் உத்தரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்

**(ந.க.எண்.1232/2020/எச்1)**

**தீர்மான எண். 75 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**9.** மேட்டூர் நகராட்சி 18வது வார்டு இந்திரா நகர் 10 மீட்டர் உயரமுள்ள LED தெருவிளக்கு அமைத்தல் பணிக்கு ரூ2.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 11.03.2020ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | M/s. K.G.Enterprises | 1,08% சதவிகிதம் |

| | | |
|---|---|---|
| | Devanampatti(Po)<br>Salem (DT) | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |
| 2 | M/s Amman Solar power system<br>Olapatti(Po)<br>Salem(Dt) | 0,23% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |

**அலுவலக குறிப்பு:-**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.23% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/s.Amman Solar Power System ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.4189/2019/இ1)**

**தீர்மான எண். 76 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

10. மேட்டூர் நகராட்சி அரசப்ப கவுண்டர் திருமண மண்டபம் அருகில் 10 மீட்டர் LED தெருவிளக்கு அமைத்தல் பணிக்கு ரூ2.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 11.03.2020ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | M/s. Amman Solor<br>Power System<br>Olappatti(PO)<br>Salem (DT) | 0.23% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | M/s K.G.Enterprises<br>Devanampatti(PO)<br>Salem(DT) | 1.13% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:-**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.23% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/s.Amman Solar Power System ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.4189-2/2019/இ1)**

**தீர்மான எண். 77 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**11.** பொது சுகாதாராம் தற்போது உலகளவில் பரவி வரும் அறிவிக்கை செய்யப்பட்ட தொற்று நோயான கொரோனா வைரஸின் தாக்கம் இந்தியாவில் ஏற்பட்டு, குறிப்பாக தமிழகத்திலும் இந்நோயின் தாக்கம் அனைத்து மாவட்டங்களிலும் பரவி வருகிறது. அவ்வாறு நோய் தொற்று பரவி வரும் வேளையில் இந்நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் நோய் தொற்று கண்டவர்களின் பகுதிகள் வெளிமாநிலங்கள் , வெளி/நாடுகளிலிருந்து வந்தவர்கள், என கண்டறிந்து அவர்கள் அவர்களை வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டு தினசரி 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. எனவே பொது இடங்கள், நோய் தொற்று கண்டறியப்பட்டுள்ள பகுதிகள், தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளுக்கு கிருமிநாசினி தெளிக்க தேவையான பிளிச்சிங் பவுடர்

அவசியம் தேவைப்படுகின்றது. எனவே பொது சுகாதாரப் பணிகளுக்கு பொதுசுகாதாரம் அவசரம் அவசியம் கருதி பிளிச்சிங் பவுடரை 10 டன் கொள்முதல் செய்யவும், அதற்காக தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.4,70,000 /- ஆகும். எனவே கிருமிநாசினியான பிளிச்சிங் பவுடரை அரசு சார்ந்த கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியினிலோ அல்லது அரசு கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளுக்காக வரப்பெறப்படும் நிதியினிலோ செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கொரோனா வைரஸ் நோய் தொற்று ஏற்பட்டுள்ள பகுதிகள், தனிமை படுத்தப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் பொது இடங்களில் கிருமிநாசினி தெளிக்க தேவையான பிளிச்சிங் பவுடரை 10 டன் அரசு சார்ந்த கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டு தொகையான ரூ.4,70,000/-க்குள் கொள்முதல் செய்யவும், அதற்கான விலைப்புள்ளிகள் கோரி கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்தோ , அல்லது அரசு கொரோனா நோய் தொற்று தடுப்பு குறித்து வரப்பெறப்படும் நிதியினிலோ செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.2711/2019/எச்1)**

**தீர்மான எண். 78 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**12.** COVID – 19 கொரோனா வைரஸ் நோய் தொற்றானது மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட தங்கமாபுரிபட்டிணம், சேலம்கேம்ப், காமராஜர் நகர், RE குடியிருப்புகளில் பகுதிகளில் வசிக்கும் 5 நபர்களுக்கு நோய் தொற்று உறுதி செய்யப்பட்டு மேல் மருத்துவ சிகிச்சைக்காக சேலத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மேலும் நோய் தொற்று பரவலை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் உடன் நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் துரிதப்படுத்தவும், கிருமிநீக்கம் செய்ய புதிதாக மகேந்திரா டிராக்டர் நிறுவனம் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Blast Sprayer-யை கொள்முதல் செய்ய உரிய தடுப்பு நடவடிக்கைகள்மேற்கொள்ளுமாறு சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் சேலம் அவர்களின் அறிவுரைகளின் பேரில், மேட்டூர் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து ரூ.5.00 லட்சம் வழங்கியுள்ளதை அடுத்து, புதியதாக Blast Sprayer கொள்முதல் செய்யப்பட்டது. இந்த கிருமி நீக்கம் செய்யும் ஸ்பிரேயரை இழுத்து செல்ல டிராக்டர் இஞ்சின் மற்றும் ஓட்டுநர் தேவைப்படுகின்றது. எனவே நோய் தொற்று தீவிரம் அடைவதை தடுக்கும் பொருட்டு வாடகைக்கு டிராக்டர் இஞ்சின் மற்றும் ஓட்டுநர் ஆகியோரை விலைப்புள்ளிகள் மூலமாக தேர்வு செய்யப்பட்டு பணிகளை மேற்கொள்ளவும், டிராக்டருக்கு தினசரி உபயோகிக்கும் எரிபொருளுக்கான செலவினம் ஆகிய இரண்டு செலவினத்தை கோவிட்-19 பணியானது முடியும் வரை ஈடுபடுத்தி கொள்ளவும், இதற்காக ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்தோ, அல்லது கோவிட்-19 குறித்து வரப்பெறப்படும் நிதியிலோ, செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) கோவிட்-19 தடுப்பு பணிக்காக மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்யப்பட்டுள்ள Blast Sprayer- ல் இழுத்து செல்லும் பணிக்கு ஓட்டுநருடன் கூடிய டிராக்டர் தேவைப்படும் பட்சத்தில் உள்ளதாலும் , கோவிட்-19 தொற்று பரவலை தடுக்கவும், ஓட்டுநர், டிராக்டருக்கு தினசரி உபயோகிக்கும் எரிபொருளுக்கான செலவினம் ஆகிய இரண்டு செலவினத்தை கோவிட்-19 பணியானது முடியும் வரை ஈடுபடுத்தி கொள்ளவும், இதற்காக ஆகும் செலவினத்தை நகராட்சி பொது

நிதியிலிருந்தோ, அல்லது கோவிட்-19 குறித்து வரப்பெறப்படும் நிதியிலோ, செலவினம் மேற்கொள்ளவும் இப்பணி குறித்து விலைப்புள்ளிகள் கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1232/2020/எச்1)**

**தீர்மான எண். 79 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

13. பொது சுகாதாரம் கோவிட்- 19 கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்கவும், தொற்று கண்டுள்ளப் பகுதிகள், தனிமை படுத்தப்பட்டுள்ள பகுதிகள், மற்றும் பொது இடங்களில் கிருமி நாசினி தெளிக்க தேவையான பிளிச்சிங் பவுடரை கொள்முதல் செய்ய 15.04.2020 -ந் தேதி விலைபுள்ளி அறிவுப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவுப்பு செய்யப்பட்டதில் 17.04.2020 –ந்தேதி கீழ்கண்ட அரசு சார்ந்த கூட்டுறவு சங்கங்கள் மூலம் விலைப்புள்ளிகள் வரபெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம்:

| வ.எண். | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை கிலோ 1-க்கு ரூ. பை | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1. | ஊரக விரிவாக்க பயிற்சி நிலைய கூட்டுறவு பண்டகசாலை கே.கே.251, கிருஷ்ணகிரி அணை, கிருஷ்ணகிரி | 44/- | அதிகம் |
| 2. | எஸ்.527, கெலமங்கலம் , வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் லிட், கெலமங்கலம், கிருஷ்ணகிரி. | 45/- | குறைவு |
| 3 | டி.டி.165, பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், வண்ணாத்திப்பட்டி, மாங்கரை, தருமபுரி | 42.50/- | அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதாரம் கோவிட்- 19 கொரோனா வைரஸ் நோய் தொற்று ஏற்பட்டுள்ள பகுதிகள், தனிமை படுத்தப்பட்டுள்ள பகுதிகள், மற்றும் பொது இடங்களில் கிருமி நாசினி செய்ய தேவையான பிளிச்சிங் பவுடரை கொள்முதல் செய்ய விலைபுள்ளிகள் கோரப்பட்டதில், வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்-3ல் காணும் M/s.டி.டி.165, பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், வண்ணாத்திப்பட்டி, மாங்கரை, தருமபுரி என்ற அரசு சார்ந்த கூட்டுறவு சங்கம் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கப்ட்டுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதியின் பேரில் பணி உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2711/2019/எச்1)**

**தீர்மான எண். 80 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

14. பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் தொற்று எவ்வாறு உருவாகுகின்றது, அதற்கான அறிகுறிகள் என்ன என்ன, அவ்வாறு எந்த எந்த முறைகளை கடைபிடித்தால் இந்நோய் தொற்றினை தடுக்கலாம் என்பது குறித்து பொது மக்கள் நன்கு அறியும் பொருட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகம் கூடுமிடங்களில் விழிப்புணர்வு விளம்பர தட்டிகள் அமைக்க உள்ளூர் பிளக்ஸ் நிறுவனங்களில் அச்சிட 15.04.2020-ந் தேதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் 17.04.2020-ந் தேதி கீழ்காணும் மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு.

| வ.எண். | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விளம்பர தட்டிகளின் அளவு | | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| | | 10x10 ஒன்றின் விலைப்புள்ளி தொகை ரூ.பை. | 5x5 ஒன்றின் விலைப்புள்ளி தொகை ரூ.பை | |
| 1. | M/s.S.S.பிளக்ஸ் பிரிண்டிங், 70/1,ராமன் நகர், மேட்டூர். | 2725/- | 1350/– | அதிகம் |
| 2. | M/s.J.K.பிளக்ஸ் & போட்டோ, ESI ஆஸ்பத்திரி அருகில், பொன்னகர், மேட்டூர் | 2700/- | 1325/- | குறைவு |
| 3. | M/s.R.R.பிளக்ஸ் & பேனர்ஸ், 116/2, தண்டா மெயின் ரோடு, கொளத்தூர். | 2750/- | 1375/- | அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் குறித்த விழிப்புணர்வு விளம்பர தட்டிகள் அச்சடித்து தங்கள் சொந்த பொறுப்பிலேயே நிறுவ வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 2-ல் காணும் M/s. J.K. பிளக்ஸ் & போட்டோ,ESI ஆஸ்பத்திரி அருகில்,பொன்னகர், மேட்டூர் என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கி உள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு, பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பேரில் பணி உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.1232/2020/எச்1)**

**தீர்மான எண். 81 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

15. கோவிட் - 19 கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட Blast Sprayer-யை இயக்க ஓட்டுநருடன் கூடிய டிராக்டர் இஞ்சின் நாள் வாடகைக்கு சப்ளை செய்ய 17.04.2020-ந்தேதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் 20.04.2020-ந்தேதி மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| **வ. எண்** | **விலைப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரி** | **வண்டி வாடகை, ஓட்டுநர் கூலி பேட்டா உட்பட நாள் 1–க்கு வாடகை விலைப்புள்ளி தொகை ரூ. பை** | **சதவிகிதம்** |
|---|---|---|---|
| 1 | திரு.K.கோவிந்தன், சிவில் எலக்ட்ரிக்கல்ஸ் & | ரூ.2,100/- | குறைவு |

| | | | |
|---|---|---|---|
| | மெக்கானிக்கல் காண்ட்ராக்டர், பூசாரிப்பட்டி (Po), காடையாம்பட்டி (TK). சேலம் | | |
| 2 | M/s.G.P.S & Co, சிவில் எலக்ட்ரிக்கல்ஸ் & காண்ட்ராக்டர், 3/352,காளியம்மன் கோவில் சமீபம், பூசாரிப்பட்டி (Po), காடையாம்பட்டி (TK). சேலம் | ரூ.2,500/- | அதிகம் |
| 3 | M/s C.P. சாமி & கோ, PWD & MMC காண்ட்ராக்டர், மடத்துப்பட்டி கிழக்கு காடு, கோனூார் (po), மேட்டூர் அணை. | ரூ.2,300/- | அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:—</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. கோவிட் - 19 கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட Blast Sprayer-யை இயக்க ஒட்டுநருடன் கூடிய டிராக்டர் இஞ்சின் நாள் வாடகைக்கு சப்ளை செய்ய, விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரிசை எண் 1-ல் காணும் திரு.K.கோவிந்தன், சிவில் எலக்ட்ரிக்கல்ஸ் & மெக்கானிக்கல் காண்ட்ராக்டர், பூசாரிப்பட்டி (Po), காடையாம்பட்டி (TK). சேலம். என்பவர் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கியுள்ளார். எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய விலைப்புள்ளிதாரருக்கு, பொதுசுகாதார அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.1232–1/2020/எச்1)**

**தீர்மான எண். 82 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**16.** இந்நகராட்சியில் கோவிட் - 19 கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக்கை 6 ஆகும். மேலும் வெளிமாநில நபர்கள் மற்றும் அண்டை நாடுகளுக்கு சென்று வந்து தனிமை படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 62 ஆகும். மேலும் நோய் தொற்று கண்டவர்களின் எண்ணிக்கையினை தடுக்கும் பொருட்டு நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் தடுப்பு கட்டைகள் கட்டி முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே கொரோனா வைரஸ் தொற்று, பணிக்கு பணியாளர்களுக்காக கொள்முதல் செய்யப்பட்ட கையுறைகள், முக கவச உறைகள், PPE KIT, சோடியம் ஹைபோகுளோரைடு மற்றும் லைசால் மருந்து பொருட்கள் மிகவும் குறைவான இருப்பிலே உள்ளது. எனவே தினசரி அரசிடம் இருந்து பிறப்பிக்கப்படும் உத்திரவுகளில் கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிகளுக்கு தேவையான பாதுகாப்பு கவச உறைகள், மருந்து பொருட்கள் எப்பொழுதும் போதுமான அளவில் இருப்பில் தயாராக இருக்கவேண்டும் எனவும், பற்றாக்குறை இல்லை என்று இடமளிக்காத வகையில் தேவையான பாதுகாப்பு உறைகள் மற்றும் மருந்துகள் இருப்பில் இருக்க வேண்டும் எனவும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் மற்றும் சேலம் மண்டலத்திற்கான Nodal அலுவலர், துணை இயக்குநர் (நகரமைப்பு), நகராட்சி நிர்வாக ஆணையரகம் ஆகியோர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியில் கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிகளுக்கு தேவையான கீழ்கண்டுள்ள பாதுகாப்பு உறைகள், மருந்து பொருட்கள் கொள்முதல் செய்ய கீழ்கண்டுள்ளவாறு தோராய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலோ அல்லது கோவிட் - 19 குறித்து அரசிடமிருந்து வரப்பெறப்படும் நிதியிலோ செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. முகவுறைகள் 3000 எண்ணிக்கை (1-ன் விலை ரூ.17 வீதம் 3000-க்கு 51000) | | ரூ. 51,000/- |
| 2. PPE KIT (1-ன் விலை ரூ.475 வீதம் (25x 475=11875 ) | ரூ. 11,875/- | உடல் பாதுகாப்பு உறை |
| 3. ரூ. 20 வீதம் (1000x20=20000) | ரூ. 20,000/- | கையுறைகள் -ன் விலை |
| 4. சோடியம் ஹைபோகுளோரைடு 1000 லிட்டர் லிட்டர் ஒன்றின் விலை ரூ.50/- வீதம் (1000x 50=50000) | | ரூ. 50,000/- |
| 5. லைசால் லிட்டர் ஒன்றின் விலை ரூ.215/-வீதம் (1000x215=215000) | | ரூ. 2,15,000/- |
| | | ரூ. 3,47,875/- |

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. கோவிட் – 19 கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் கொள்முதல் செய்யப்பட்ட கையுறைகள், முகவுறைகள், சோடியம் ஹைபோகுளோரைடு, மற்றும் லைசால் போன்ற கிருமி நாசினி பொருட்கள் இருப்புகள் மிகவும் குறைவாக உள்ளதால்,தொடர்ந்து நோய் தொற்றை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் தேவையான பாதுகாப்பு உறைகளான கையுறைகள், முகவுறைகள், சோடியம் ஹைபோகுளோரைடு மற்றும் லைசால் கிருமி நாசினி மருந்தினை கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.3,47,875/-க்குள் செலவினம் மேற்கொள்ளவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியினிலோ அல்லது கோவிட் - 19 குறித்து அரசிடமிருந்து வரும் நிதியினிலோ செலவினம் மேற்க்கொள்ளவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி இப்பணிகளுக்கு விலைப்புள்ளிகள் கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.2205/2019/எச்1)**

**தீர்மான எண். 83 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**17.** 2020–2021–ம் ஆண்டிற்கான அலுவலக உபயோகத்திற்கு தேவையான A4, A3, Legal பேப்பர் பண்டல்கள், படிவங்கள், பதிவேடுகள் மற்றும் எழுது பொருட்கள் ஆகியவற்றை தமிழ்நாடு மல்டிபர் இண்ட்கோ சர்வ்-கூட்டுறவு திருச்சி என்ற நிறுவனத்திடம் வாங்கவும், அதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ.10,00,000 (பத்து லட்சம்)-க்கு மேற்படி செலவு தொகை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3155/2019/பி3)**

**தீர்மான எண். 84 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

18. கோவிட்- 19 கொரோனா வைரஸ் தொற்றை தடுக்கவும், கட்டுப்படுத்தவும், பொது இடங்கள், நோய் தொற்று கண்டறியப்பட்டுள்ள பகுதிகள், தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் கிருமி நாசினி மருந்துகளை கம்பரசர் பவர்ஸ் ஸ்பிரேயர் தெளிப்பின் மூலம் தெளிப்பு பணிக்கு தேவையான லைசால் மற்றும் சோடியம் ஹைபோகுளோரைடு போன்ற கிருமி நாசினி மருந்துகளை கொள்முதல் செய்ய 23.04.2020-ந் தேதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் 25.04.2020-ந் தேதி கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப் பெறப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு.

| வ. எண். | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | 1 லிட்டர் சோடியம் ஹைபோகுளோரைடு விலைப்புள்ளி விலை ரூ. பை. | லைசால் லிட்டர் 1-ன் விலைப்புள்ளிதொகை ரூ.பை. | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1. | M/s.ஸ்ரீ டிரேடர்ஸ், 22-A, வையாபுரி நகர், 3வது கிராஸ், கரூர். | ரூ.49/- | ரூ.200/- | அதிகம் |
| 2. | M/s.ஸ்ரீ அத்திக் கெமிக்கல்ஸ், 464/1,வையாபுரி நகர், 2வது கிராஸ், செங்குந்தபுரம், கரூர். | ரூ.50/- | ரூ.210/- | அதிகம் |
| 3. | M/s.சத்யா ஏஜென்ஸிஸ், 4/152, மதுரை வீரன் கோவில் தெரு, T.செல்லாண்டிபாளையம், கரூர். | ரூ.46/- | ரூ.196/- | குறைவு |

<u>அலுவலக குறிப்பு:—</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கோவிட்- 19 கொரோனா வைரஸ் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தும் பணிக்கு கம்பரசர் பவர் ஸ்பிரேயர் மூலம் லைசால் மற்றும் சோடியம் ஹைபோகுளோரைடு போன்ற மருந்துகளை கொள்முதல் செய்ய வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 3-ல் காணும் M/s.சத்யா ஏஜென்ஸிஸ், 4/152, மதுரை வீரன் கோவில் தெரு, T.செல்லாண்டிபாளையம், கரூர். என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கியுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில், பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதி சப்ளை உத்திரவு வழங்கப்பட்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1232/2020/எச்1)**

**தீர்மான எண். 85 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

19. கோவிட்- 19 கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தும் பணிகளுக்கு, பணியாளர்கள் பயன்படுத்தப்படும் முகவுறைகள், கையுறைகள், உடல் பாதுகாப்பு உடைகள், PPE KIT போன்றவற்றை கொள்முதல் செய்ய 23.04.2020-ந் தேதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் 25.04.2020-ந் தேதி கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப் பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண். | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | முகவுறை 1-ன் விலைப்புள்ளி விலை | கையுறை ஒன்றின் விலைப் | உடல் பாதுகாப்பு உடை விலைப்புள்ளிவிலை | சதவிகிதம் |
|---|---|---|---|---|---|

| | | ரூ. பை. | புள்ளி விலை ரூ.பை. | ரூ. பை. | |
|---|---|---|---|---|---|
| 1 | M/s.Reliant GlobalGreen Energy & Co,<br>No.856, Abirami illam, 11th cross street, Coimbatore. | 14.79/- | 18.37/– | 454.65/– | குறைவு |
| 2 | M/s.Shine Traders,<br>L-64/305(1)Police Quarters, Ganapathy, Coimbatore. | 15.75/– | 18.58/– | 458.85/– | அதிகம் |
| 3 | M/s.Rediaant Textile Process, No.241, Sengunthapuram West, Bhavani Main Road, Chithode, Erode. | 16.27/- | 18.59/– | 462.00/– | அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2.** கோவிட் **– 19** கொரோனா வைரஸ் தொற்றை தடுக்கவும், கட்டுப்படுத்தவும், பணியாளர்களுக்கு தேவையான கையுறைகள், முகவுறைகள் மற்றும் சோடியம் ஹைபோகுளோரைடு மற்றும் லைசால் மருந்தினை கொள்முதல் செய்ய வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். **1**-ல் காணும் M/s.Reliant GlobalGreen Energy & Co,No.856, Abirami illam, 11th cross street, Coimbatore.என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கியுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் சப்ளை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1232/2020/எச்1)**

**தீர்மான எண். 86 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

20, மேட்டூர் நகராட்சியில் தமிழக அரசின் மூன்றாண்டு சாதனை குறித்த விளம்ர பேனர் பிரிண்டிங் செய்ததற்கு ஓவிய பிரிண்டர்ஸ் & டிசைனர்ஸ் விளம்பரம் கட்டணம் ரூ.7500/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3802/2010/இ1)**

**தீர்மான எண். 87 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

21. இந்நகராட்சியில் நகராட்சி சார்பாக தினசரி நாளிதழ்களில் ஒப்பந்த பணிகளுக்கு செய்தி மக்கள் தொடர்பு அலுவலக மூலம் விளம்பரம் செய்யும் போது அதற்கான பட்டியல் தொகையை சம்மந்தப்பட்ட நாளிதழ்களுக்கு உடனே வழங்க வேண்டியுள்ளது. எனவே, 2020-2021ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஆகும் விளம்பர கட்டணம் உத்தேச செலவினம் ரூ.5,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம்

அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3802/2010/இ1)**

**தீர்மான எண். 88 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

22. இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவிற்கு புதியதாக 5 எண்ணிக்கை கொண்ட கணினி (Computer), கலர் பிரிண்டர்-1, ஸ்கேனர் பிரிண்ட்-1 மற்றும் பிரிண்டர் -1 எண்ணிக்கை வாங்க உத்தேச செலவினம் ரூ.3,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1456/2020/இ1)**

**தீர்மான எண். 89 நாள். 29.04.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**ஆணையாளர் (ம) தனி அலுவலர்,**
**மேட்டூர் நகராட்சி.**